# விடியல்

THE DAWN மாத இதழ்

பொழுது - 98
ஜூன் 2017




## உலக சுற்றுச்சூழல் தினம்




KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.
*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog* : *ksrcasthamizh.blogspot.in*
*Email* : *vidiyalmagazhine@gmail.com*
*Website* : *ksrcas.edu*

# விடியல்
The Dawn

இதழ்-98, ஜுன் -2017

**கௌரவ ஆசிரியர்**
**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**
**முனைவர் சி.ரா.சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**
**திரு. மு.சதீஸ்குமார்**
தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**
திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
திரு. செ.தங்கராஜ்
முனைவர் ப.பிரதீபா
முனைவர் சு.முப்பிடாதி
திரு. மு.சத்தியராஜ்
முனைவர் ப.சிலம்பரசன்
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. து.சூசைபிரகாசம்
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்யப்பிரியா
திருமதி கொ.சத்யா
திருமதி கா.வெண்ணிலா

## தலையங்கம்
## உலக சுற்றுச்சூழல் தினம்

மனிதனைச் சுற்றியுள்ள மொத்த அம்சங்கள் **சூழல்** எனலாம். நாள்தோறும் நாம் காண்கின்ற நம்மைச் சுற்றியுள்ள சகல அம்சங்களையும் சூழல் என்பது குறித்து நிற்கும். அந்த வகையில் சூழல் என்பது உயிர் வாழும் அங்கிகளுக்கு (ORGANISISMS) இடையில் காணப்படும் நிலைமை களின் மொத்தக் கூட்டு என வரையறுக்கப்படும். உயிரற்றனவாகிய பௌதீக, இரசாயன அசேதனங்கள் (ABIOTIC)களுக்கும் உயிர் வாழும் சேதனங்களின் (BIOTIC) பரிமாணங் களுக்கும் இடையிலான இடையீடு களாகிய இதன் விளைவே இச்சூழல் நிலைமைகளாகும். இச்சூழலை இரண்டாகப் பிரிக்கலாம்.

1.பௌதீகச்சூழல் > இயற்கைச்சூழல்
2.பண்பாட்டுச்சூழல் > மனிதனால் உருவாக்கப்படும் சூழல்.

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:
**தமிழ்த்துறை**
**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி** (தன்னாட்சி)
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publish

பௌதீகச்சூழலில் தரைத்தோற்றம், வடிகாலமைப்பு, காலநிலைத் தன்மைகள், தாவரங்கள் என்பன அடங்கும். பண்பாட்டுச்சூழலில் பயிர்ச்செய்கை அம்சங்கள், நகரச்சூழல் அம்சங்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட தெருக்கள் என்பனவற்றோடு இவற்றில் வாழுகின்ற சமூகச்சூழல் ஆகியன அடங்கும். சூழல் எனும் சொல்லை எளிதாக விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் அதை வரையறை செய்வது மிகவும் கடினமாகும்.

அண்மைக்காலங்களில் மனிதனைச் சூழ்ந்து காணப்படும் பௌதீக, பண்பாட்டு அம்சங்களுக்கு வழங்கப்படும் மறுபெயரே சூழல். சுற்றுச்சூழலைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து செயல்படத் தவறியதன் விளைவுகளை மனிதகுலம் இப்போது தாராளமாக அனுபவிக்கத் தொடங்கிவிட்டது. ஒருபுறம் வறட்சி மறுபுறம் வெள்ளக்கொடுமை, சூறாவளி என இயற்கைச் சீற்றங்கள் சுழற்சியாக வந்து கொண்டேயிருக்கின்றன.

மேற்கு உலகில் சூழலியல் அரசியலின் முக்கியமானதொரு அம்சமாகியுள்ளது. பசுமைக்காட்சிகள் தோற்றம் பெற்று பாராளுமன்ற ஆசனங்களையும் கைப்பற்றி மனிதருக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையிலான நெருக்கமான பிணைப்பினால் மக்கள் மத்தியில் கூடுதல் விழிப்புணர்வு உருவாவதற்கு பெரும் பங்களிப்பைச் செய்து வருகிறது.

மரங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு மிகவும் முக்கியமானதாகும். மனிதனின் இருப்புக்கு மரங்கள் அத்தியாவசியம் என்பதைப் பலரும் உணருவதில்லை. மரங்கள் இல்லையெனில் நாம் இறந்துவிடுவோம். இதனாலேயே சுற்றுச் சூழலியலாளர்கள் மரங்கள் தறித்து வீழ்த்தப்படுவதற்கு எதிராகப் பெரும் இயக்கங்களை முன்னெடுத்து வந்திருக்கிறார்கள்.

மனிதர்களினால் செய்யப்படக்கூடிய மிகவும் மூர்க்கத்தனமான செயல்களில் ஒன்று மரங்களையும் காடுகளையும் அழித்து பூமியை ஒரு பாலைவனம் ஆக்குவதுதான். எஞ்சியுள்ள காடுகளும் மிகவும்

மோசமாகச் சீரழிக்கப்பட்டு வருகின்றன. மனித அபிவிருத்திற்காகவும், அடுத்த சந்ததிக்காகவும் இயற்கை வளங்களை மனிதன் திட்டமிட்டுப் பேணவேண்டிய பொறுப்புடையவன் ஆகின்றான்.

**காற்றுக்கும் தண்ணீருக்கும்**
**மரணதண்டனை கொடுத்துவிட்டு**
**பிறகெப்படி எதிர்பார்ப்பது**
**ஆரோக்கிய வாழ்வு...!**
**தண்ணீரை அதன்**
**கற்பிழக்காமல் காப்போம் ..!**
**காற்றை வடிகட்டி**
**காயம் ஆற்றுவோம்..!**
**புகைக்கு தடைபோட்டு**
**கதவடைப்போம்..!**
**பசுமை வளர்க்க**
**முதலில் வழிவிடட்டும்**
**நம் வாசற்படிகள்...**
**அப்போதுதான்...**
**துளிர்விடும் இந்த உயிர்க்கோளம்...!**

**இணையாசிரியர்.**



# உள்ளுறை

## உலக தந்தையர் தினம்

கவிதைகள்............................... 05 - 10

உலக தந்தையர் தினம்..........11 - 14

சார் என்பதன் பொருள்.............16 - 17

ஆன்றோர் அமுதமொழிகள்......23 - 24

பொது அறிவு...............................25 - 25

பொதுவானக் கவிதைகள்........26 - 32

# கவிதைகள்

## வகுப்பறை

வகுப்பறையில் கரும்பலகைக்கும்

தூணுக்கும் தெரியும் - நம்

தோழிகளின் சிரிப்பொலி...!

**ப.திவ்யபாரதி**

**இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு**

## நட்பு

உறங்கும் நேரத்திலும் ஊக்கம் கொடு
கவலைகள் மறைய சக்திகொடு
எந்த நிலையிலும்
நீ இருக்கிறாய் என்ற எண்ணம் கொடு.
தோழா! பிறப்பு இறப்பு எப்போது என்று
தெரியவில்லை..!
வாழ்கின்ற
இந்தக் காலம் முழுவதும்
உன் தோழனாக வாழும்
வாய்ப்புக் கொடு!

**சீ.சூர்யா**

**இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு**

## கருணை உள்ளம் வேண்டும்

என்ன உலகம் இது
பார்வையிழந்தவர்களை
இழிவுபடுத்துகிறது.
பார்வையிழந்தவர்களை
பரிகசிக்கிறது
பாவம் அவர்கள்...
பசுவின் நிறமோ, பாலின் நிறமோ
அறியாத பிஞ்சுகளை....
நிறம் சொல்லி ஏளனம் செய்யும்
நகரவாசிகள்....
அன்புள்ள கடவுளுக்கு
ஒரு விண்ணப்பம்
அடுத்த பிறவியில் என்னையும்
குருடனாகவே படைத்துவிடு
பிறரை மதிக்கத் தெரியாத மானுடர்
மத்தியில் குருடனாக இருப்பதே
கோடிபுண்ணியம்.
மீண்டும் ஒரு அன்னைதெரசாவை
படைத்துவிடு
கருணை உள்ளம் வேண்டுமென்று
இவ்வுலகத்திற்கு உணர்த்துவதற்கு...

**சீ.மோகனப்பிரியா**
**இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு**

## மறுசுழற்சி

காய்ந்து உதிர்ந்த
மரக்குச்சிகள்
மனநிறைவோடு
மீண்டும்
மரத்துக்குத் திரும்புகின்றன
பறவைக்கூடுகளாய்!!!

**இரா.தீபா**
**இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு**

## நட்பு

காகிதத்தில் ஓவியம் போல் வரையும்
பேனாவல்ல நம் நட்பு!
கடலில் சேரும் அலை போன்றது
நம் நட்பு!
வானத்தில் தோன்றும் வானவில் அல்ல
நம் நட்பு!
என்றும் வானில் தோன்றும்
நிலவே நம் நட்பு!
புத்தகத்தில் தோன்றும் எழுத்தல்ல
நம் நட்பு!
என்றுமே நிலையான காவியமானது
நம் நட்பு!
வானிலே தோன்றும் ஒளியைப்
போல என்றுமே வெளிச்சம் தரும்
வாழ்க்கையே நம் நட்பு!
மின்னலில் தோன்றும்
ஒளிபோல

மிக அழகாய் தோன்றும் நிலவே
நம் நட்பு....!

**க.பிரியதர்ஷினி**
**இரண்டாமாண்டு கணிதவியல் ‘அ’ பிரிவு**

## பெண்

ஒவ்வொரு உறவின்
தொடக்கமே பெண்
பிறப்பு முதல் இறப்பு வரை
அவளுக்கென்று வாழாமல்
ஒவ்வொரு நொடியும்
மற்றவரின் விருப்பத்தை
நிறைவேற்றுபவளே பெண்!
பூக்களைப் போன்று
உலகில் மலர்ந்து
இருப்பவள் பெண்!
எப்பொழுதும் மற்றவர்களுக்கு மணம்
வீசுபவளாகவே திகழ்கின்றவள் பெண்!
பொறுமையும் பெருமையும் பெற்று
கண்ணாடியாகத் திகழ்பவளே பெண்!
காலச்சுவடி அழியலாம் பல
காலங்கள் அழியலாம் ஆனால்
பெண்களின் தியாகங்களும் திறமைகளும் அழியாது
போற்றப்படும் ஒவ்வொருவர் மனதிலும்....

**ம.சௌந்தர்யதர்ஷினி**
**இரண்டாமாண்டு கணிதவியல் ‘அ’ பிரிவு**

# இயற்கை வேளாண்மை

வானத்தைப் பார்த்தே
விதைத்தான் விவசாயி
அது என்னவோ
சில காலம் செழுமை!
பல காலம் வறுமை!
மாதம் மும்மாரி என்ற நிலை மாறி
வருடம் மும்மாரி என்ற நிலை
எங்களுக்கு!
கடன் இல்லாக் கஞ்சி
கால் வயிறு போதும்
என்பதோ அக்காலம்
கந்துவட்டி மீட்டர்வட்டி
கரண்ட்வட்டி என்கிறது இக்காலம்.
நெற்களஞ்சியமும் பாலையானது
உணவுக்கும் பஞ்சமானது
வயலுக்கும் இயற்கை மாறி
செயற்கை வந்தது
சதம் அடிக்கும் வாழ்க்கை
சேதம் ஆனது
பசுமை உலகை
பணக்காரர்களுக்கு
அளித்து விட்டு
வறட்சியை தேடும் நிலை
இயற்கையை தொலைத்து
செயற்கைக்கு விலை கொடுக்கும் நிலை

பணம் என்ற காகிதத்தைப் பெற
பொன்விளையும் நிலத்தையும்
நகரமயமாக்கிய நிலை
மாடிமேல் மாடிகளாகக் கட்டினாலும்
உணவு என்னவோ நெல்மணிகள்தான்....

**செ.கணேஷ்ராம்**
**இரண்டாமாண்டு கணிதவியல் 'அ' பிரிவு**

## சேமிப்பு

சேர்ப்பது மிகக் கடினம்
செலவு செய்வது மிக எளிது
பணம் மட்டும் அல்ல
அடுத்தவர் உள்ளத்தில்
நாம் சேர்த்து வைக்கும்
நல்லெண்ணமும் கூட...

## எண்ணங்கள்

சிவப்பு மனிதனுக்கு நிழல்
கருப்புதான்!
கருப்பு மனிதனுக்கு இரத்தம்
சிவப்புதான்!
வண்ணங்களில் இல்லை
வாழ்க்கை.
மனித எண்ணங்களில் உள்ளது
வாழ்க்கை.

**கா.சிந்துஜா**
**கணிதவியல் இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு**

# உலக தந்தையர் தினம்

## ஜீன் - 18




ஒரு குடும்பத்தில், குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பேணும் பொறுப்பு எப்படித் தாய்க்கு இருக்கிறதோ, அதேபோல் அந்த குழந்தைகளின் முன்னேற்றத்தில் தந்தையின் பங்களிப்பு முக்கியமாக இருக்கிறது.

இருந்தாலும், குடும்பத்திற்காக மாடாய் உழைத்து, ஓடாய்த் தேயும் தந்தையைவிட, அன்பைப்பொழியும் தாயைத்தான் பெரும்பாலான பிள்ளைகளுக்கு அதிகம் பிடிக்கிறது.

உலகம் முழுவதும் ‘அன்னையர் தினம்’ என்பது காலங்காலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால், **‘தந்தையர் தினம்’ என்பது 1910–ம் ஆண்டில்** இருந்து தான் கொண்டாடப்படுகிறது.

அதற்கு காரணமாக விளங்கியவர் அமெரிக்காவைச் சேர்ந்த **சொனாரா லூயிஸ் ஸ்மார்ட் டோட்** என்ற பெண் ஆவார். அவரது தாயாரின் மறைவுக்குப் பிறகு, அந்தக் குடும்பத்தில் இருந்த 6 பிள்ளைகளையும் தந்தை வில்லியம்ஸ் தான் கடும் சிரமத்திற்கு மத்தியில் வளர்த்தார். தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருந்து கடமையை நிறைவேற்றிய தனது தந்தையைக் கவுரவிக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது.

அதன் அடிப்படையில், அன்னையர் தினத்தைப்போல் தந்தையர் தினத்தையும் கொண்டாட வேண்டும் என்று அவர் பிரச்சாரம் செய்தார். அவரது கோரிக்கையை, அப்போதைய ஸ்போக்கேன் நகர கவர்னர் அங்கீகரித்தார். அதன் பின்னர்தான், தந்தையர் தினமும் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

**உலகம் முழுவதும் 52 நாடுகளில் ஜூன் மாதம் 3–வது ஞாயிற்றுக்கிழமை ‘தந்தையர் தினம்’ கொண்டாடப்படுகிறது.** வேறு பல நாடுகளில், பிற நாட்களில் இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தஅளவில், ஜூன் மாதம் 3–வது ஞாயிற்றுக்கிழமையே ‘தந்தையர் தினம்’ கொண்டாடப்படுகிறது. கனிவான கண்டிப்பையும், மறைமுகமான பாசத்தையும் வெளிப்படுத்தும் தங்களுடைய தந்தையைக் கவுரவித்துப் பரிசுகளை வழங்க, தமிழகத்தில் உள்ளவர்கள் தயாராகி வருகின்றனர்.

இன்றைய பரபரப்பான உலகில், குடும்பத்தின் வளர்ச்சிக்காக உழைக்க ஓடிக்கொண்டிருக்கும் தந்தைகளில் எத்தனையோ பேர், குடும்பத்தைப்பிரிந்து வெளிநாடுகளில் உழைத்துக் கொண்டிருக்கின்றனர் சென்னையைப் போன்ற பெரு நகரங்களில் குடும்பத்துடன் இருந்தாலும்,

காலையில் குழந்தை கண்விழிக்கும்போது வீட்டை விட்டு வெளியேப் புறப்படும் தந்தைகளில், இரவு குழந்தைத் தூங்கும் நேரத்தில் தான் வீடு திரும்புகிறார்கள். அந்த அளவுக்குக் குழந்தைகள் உடனான உறவை வேலைப்பளு பிரிக்கிறது.

இதுபோன்ற சூழ்நிலையில், வீட்டில் இருக்கும் தனது சிறு வயது குழந்தைகளுக்குப் பொம்மை வாங்கிக்கொடுத்து விளையாடச் சொல்லிவிட்டு பல தந்தைமார் வேலைக்குச் செல்கிறார்கள். ஆனால், அந்தக் குழந்தையோ, பொம்மைக்குப் பதிலாகத் தனது தந்தை, அருகில் இருந்து விளையாடமாட்டாரா? என்று ஏங்குகிறது. பொருளாதாரத் தேவை அந்த அளவுக்குக் குடும்பச்சூழ்நிலையை மாற்றிவிடுகிறது. இருந்தாலும், தந்தைமீதான பாசம் அந்தக் குழந்தைகளுக்குக் குறைந்து போய்விடுவதில்லை.

சிறு வயதில், தாய், தந்தையின் கை விரலைப்பிடித்து தத்தித்தத்தி நடக்கப் பழகும் குழந்தைகள், தங்களது பெற்றோரின் முதுமைக் காலத்தில், அவர்களின் நடை தளரும்போது, கையைப் பிடித்து நடக்க உதவுவதுதான், தாய், தந்தைக்கு ஆற்றும் கடமையாக இருக்க முடியும். அதற்கான உறுதியை இன்றைய தந்தையர் தினத்தில் அனைவரும் ஏற்போம்.

தாயின் அன்புக்கு நிகரானது தந்தையின் பாசம். குழந்தையைக் கருவில் சுமந்து பெற்றெடுப்பது தாய் என்றால், நாலெல்லாம் நெஞ்சில் சுமப்பவர் தந்தை. குழந்தையின் ஆரோக்கியத்தின் மீது தாய் கவனம் செலுத்துவது போல, அதன் முன்னேற்றத்துக்காக ஆயுள் முழுவதும் உழைப்பவர் தந்தை.

**“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல்.” (குறள்-70)**

என்ற குறளுக்கு ஏற்ப வாழ்வது மட்டுமின்றி நம்மை இந்த உலகில் நல்ல நிலைக்குக் கொண்டுவர தன்னை வருத்திக்கொண்டு அதனை வெளிக்காட்டாமல் நம்மை வளர்த்த தந்தையை வாழ்நாள் முழுவதும் மறவாமல் இந்த உலகிலுள்ள அனைத்துத் தந்தையருக்கும் சேர்த்து ஒருநாள் கொண்டாடுவதில் தவறில்லை என்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

**மு.சதீஸ்குமார்**
**இணையாசிரியர்.**

## உறவுகள்

தனித்து வாழும் வாழ்க்கை
இனிமையாக இருப்பதில்லை!
சேர்ந்து வாழும் வாழ்க்கையில்
ஊர்ந்து செல்லும் ஆமைபோல்
மெதுவாகச் சென்றாலும் அதில் இருக்கும்
பொறுமையே பெருமையாக இருக்கும்
ஒற்றுமையாக வாழும்போது எல்லோரும்
சேர்ந்திருந்தால் துன்பங்கள் மறையும்
நம்பிக்கை ஊட்டும் உறவுகளுடன்
கூடி வாழ்வதே இன்பமாகும்.

**ச.சந்தியா**
**கணிதவியல் முதலாமாண்டு ‘இ’ பிரிவு**

## நட்பு

தனித்து இருக்கிறேன் என
நினைக்கும்போது வருபவள் தோழி
கஷ்டத்தில் அழும்போது கண்

துடைக்க வருபவள் தோழி
இன்பமாக இருக்கும்போது அதில்
பங்கெடுக்க வருபவள் தோழி
நாம் எவ்வளவு உயரத்தை
அடைந்தாலும் பெருமையாக
நினைப்பவளே தோழி – அதுவே
நம் நட்புக்குச் சாட்சியாக...

**ச.சந்தியா**

**கணிதவியல் முதலாமாண்டு ‘இ’ பிரிவு**

## அப்பா

அப்பா உன் வழியில்
    வளர்ந்தவன் நான்!
பின்வரும் காலத்தில்
    உன்னை என் வழியில்
வைத்துப் பார்ப்பேன் நான்.

**ஜீ.கர்ணன்**

**கணிதவியல் முதலாமாண்டு ‘இ’ பிரிவு**

## நட்பு

நம் சந்தோஷம்
மட்டுமே தெரிந்த
நட்பை விட...
நம் கஷ்டங்களை
சொல்லாமல் தெரிந்து
ஆறுதலாக இருக்கும்
நட்பே சிறந்தது...

**ர.நிவேதா**

**கணிதவியல் முதலாமாண்டு ‘ஆ’ பிரிவு**

## வெற்றி

வெற்றியோ உன் தோல்விக்கு
கிடைத்த அன்பளிப்பு
தோல்வியோ உன் முயற்சிக்கு
கிடைத்த அனுபவங்கள்.

## கல்லறையில்

என்னை விட்டுப் போ என்று
சொல்லும் போது
செல்ல மனம் வராது
நீயே என் கல்லறையில்
உதிர்ந்த பூக்களாகி விட்டாய்
நட்பே...!

**ர.நிவேதா**
**இரண்டாமாண்டு இயற்பியல் 'அ' பிரிவு**

## Sir..சார் என்பதன் அர்த்தம்

எந்த ஒரு பன்னாட்டு நிறுவனங்களிலும் **Sir..சார்** என்று அழைக்கக்கூடாது. முதல் பெயர் (first name) சொல்லித்தான் அழைக்கவேண்டும். ஆனால், ஆங்கிலேயர் நமக்கு அளித்த அடிமை வார்த்தையை இன்று வரை பெருமையாக சிலர் வழக்கத்தில் பயன்படுத்தி வருகின்றனர்.

**Sir..சார்** என்று ஒருவரை அழைப்பதை அவர்களும் விரும்புவார்கள். ஆங்கிலம் பேசிவிட்டோம் என்று நாமும் மகிழ்வோம்...... அதன் அர்த்தம் என்ன?

**'SLAVE I REMAIN'** என்பதன் சுருக்கமே **Sir..சார்** அதாவது நான் உங்களின் அடிமை என்பதை மறுபடியும் நினைவூட்டுகிறேன்

என்பதே.. ஒரு காலத்தில் அடிமைகள் மட்டுமே சொல்லும் ஒரு வாசகம் **Sir..(சார்)...**

**சா.ஜீவியா**
**இயற்பியல் இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு**

## தாய்

கோயிலில் தொழுவதும்
அங்கே
புன்னகைப்பதும்
உன் முகம்தான்.
கடவுள்
கண்முன் வந்தால்
கேட்பேன்
ஒரே ஒரு வரம்
மீண்டும் உன் கருவறையில்
ஓர் இடம்...

**வீ.திவாகரன்**
**கணிதவியல் முதலாமாண்டு 'ஆ' பிரிவு**

## உங்களுக்குத் தெரியுமா?

» வெங்காயம் நறுக்கும் போது, சூயிங்கம் சாப்பிட்டால் கண்ணீர் வராது.

» இயர்போன் ஒரு மணி நேரம் அணிந்திருந்தால் 700 முறை பாக்டீரியா வளரும்.

» வெங்காயம் கொழுப்பைக் குறைக்கும்.

» பெரும்பாலான கைக்கடிகாரம் விளம்பரத்தில் காட்டப்படும் 10:10மணி புன்னகையைக் குறிக்கும்.

» நீல நிறம், மக்களை அமைதிப்படச் செய்யும். மனித மூளை 11 வகை இரசாயணத்தை அமைதிப்படுத்த அனுப்புகிறது.

» குழந்தைகள் பிறக்கும் போது மூட்டுகள் இல்லாமல்தான் பிறக்கின்றார்கள். 2 முதல் 6 வயது காலங்களில்தான் மூட்டு வளர்கிறது.

» கண்களைக் கசக்கும் போது தோன்றும் நட்சத்திரம் மற்றும் கலர்கள் பாஸ்பீன்ஸ் எனப்படும்.

» 8 மாதம் வரை குழந்தைகள் அழும்போது கண்ணீர் வராது.

» புது பேனாவை எழுதக் கொடுத்தால் 97 சதவீத மக்கள் தங்கள் பெயரையே எழுதுவார்கள்.

**கு.கமலி**

**கணிதவியல் முதலாமாண்டு 'இ' பிரிவு**

## அம்மா

அம்மா உனக்கும் எனக்கும்
உள்ள உறவு
தொப்புள்கொடி உறவு! ஆனால்
நான் பிறக்கும்போதே அது
அறுந்துவிட்டது. இருப்பினும்
உன்மேல் வைத்திருக்கும்

பாசம் என்னும் கொடியை

யாராலும் அறுக்க முடியாது!

கொஞ்சலும் கோபமும்

உன்னிடம் மட்டுமே

காட்ட முடியும். ஏனென்றால்

நீ என் உயிரின் மறுபாதி.

**வ.வர்ஷா**

**கணிதவியல் முதலாமாண்டு 'இ' பிரிவு**

## உங்களுக்குத் தெரியுமா?

### திருமண ஆண்டு நிறைவுப்பெயர்கள்

- முதலாம் திருமண ஆண்டு நிறைவின் பெயர் – **பருத்தி**
- 2ம் ஆண்டு நிறைவின் பெயர் – **காகிதம்**
- 3ம் ஆண்டு நிறைவின் பெயர் – **தோல்**
- 4ம் ஆண்டு நிறைவின் பெயர் – **பழமும், மலரும்**
- 5ம் ஆண்டு நிறைவின் பெயர் – **மரம்**
- 6ம் ஆண்டு நிறைவின் பெயர் – **சர்க்கரை**
- 7ம் ஆண்டு நிறைவின் பெயர் – **கம்பளி**
- 8ம் ஆண்டு நிறைவின் பெயர் – **உப்பு**
- 9ம் ஆண்டு நிறைவின் பெயர் – **செம்பு**
- 10ம் ஆண்டு நிறைவின் பெயர் – **தகரம்**

- 12ம் ஆண்டு நிறைவின் பெயர் – **பட்டு நைஸ்லின்**
- 15ம் ஆண்டு நிறைவின் பெயர் – **கிறிஸ்டல்**
- 20ம் ஆண்டு நிறைவின் பெயர் – **சைனா**
- 25ம் ஆண்டு நிறைவின் பெயர் – **வெள்ளி**
- 30ம் ஆண்டு நிறைவின் பெயர் – **முத்து**
- 40ம் ஆண்டு நிறைவின் பெயர் – **ரூபி**
- 50ம் ஆண்டு நிறைவின் பெயர் – **பொன்**
- 60ம் ஆண்டு நிறைவின் பெயர் – **வைரம்.**

கு.கமலி

**கணிதவியல் முதலாமாண்டு 'இ' பிரிவு**

## புதுமையான விடுகதை

∑ பச்சைக்கதவுகள், வெள்ளை ராணி, கருப்பு ராஜா அது என்ன?

விடை : ***சீதாப்பழம்***

## பாரதியார்

தலப்பா அணிந்த மூத்தவரே!

முறுக்கு மீசை கொண்டவரே!

கவிதைகள் எழுதியே வாழ்ந்தவரே!

தமிழ்நாட்டின் பெரும் மனிதரே!

உலகத்திலுள்ள உயர்கருத்துக்களை

கவிதையாக எங்களுக்கு

எடுத்துரைத்த இறைவனே...!

**கு.கமலி**

**கணிதவியல் முதலாமாண்டு 'இ' பிரிவு**

## நட்பு

வாழ்க்கை ஒரு
விசித்திரமான பரீட்சை
அடுத்தவரைப் பார்த்து
காப்பி அடித்ததால்
பலர் தோல்வியடைகிறார்கள்
காரணம் ஒவ்வொருவருக்கும்
தனித்தனி கேள்வித்தாள்....

**சி.பிரசாந்த்**

**கணிதவியல் இரண்டாமாண்டு 'இ' பிரிவு**

## நண்பன்

நண்பன் இருந்தால் வாழ்வில்
துன்பம் தெரியாது
நண்பன் பிரிந்தால் வாழ்வில்
இன்பம் தெரியாது...
நண்பனை மறக்காதே...

**சி.பிரசாந்த்**

**கணிதவியல் இரண்டாமாண்டு 'இ' பிரிவு**

## வாழ்க்கை

கடந்துபோகும்
நொடியெல்லாம்
வாழ்வது மட்டும் அல்ல
கடக்க முடியாத நொடியில்
விழாமலும் இருப்பதே
வாழ்க்கை....

## உறவின் பந்தம்

தேனுக்கான சொந்தமே
பட்டுப்பூச்சிக்கு மலருடன்
சில நிமிடங்களில்
முடிந்துவிடும்.
சில மனிதர்களும் இதுபோலத்தான்
தேவைகளுக்காகவே
தேவைப்படுகிறது
சொந்தங்கள்!!

**ந.கௌசல்யா**
**கணிதவியல் இரண்டாமாண்டு ‘இ’ பிரிவு**

## மழை

மழைமேகம் கதிரவனை மறைத்திருக்க
சற்றுமுன் பெய்த மழை நீர்
மரங்களில் தங்கி நிற்க
பூக்களின் வாசமும்
சாரலின் ஈரமும்
காற்றில் நிறைந்திருக்கும்.

அக்காற்று என் நாசியை
நனைத்திடும்.
வளைந்து செல்லும்
செம்மண் சாலையில்
சுற்றி எங்கும் பசும்புட்கள்
கம்பளமாய் விரிந்திருக்கும்
கடிகார நொடிமுள்ளை விட
என்வேகம் குறைவாக
நடக்கிறேன்.
தென்றல் காற்றில் கலந்த
மண்வாசம் எனைக் கட்டிக்கொள்ள
இயற்கையின் அழகு
எனை முழுவதும்
ஆட்கொள்கிறது.

**வி.திவ்யா**
**முதலாமாண்டு கணிதம் 'ஆ' பிரிவு**

## ஆன்றோர் அமுத மொழிகள்

» நன்றாக மனம் விட்டுச் சிரியுங்கள். உங்களுடைய சிரிப்பில் உலகம் பங்கு கொள்ளும்.

» கிடைக்காததைத் தேடாதே, கிடைப்பதை விட்டு விடாதே உண்மை அழிவற்றது; பொய்மை அழியக்கூடியது.

» பிறர் கேட்காமலேயே தேவை அறிந்து கொடுப்பதே ஈகை.

» பண்பட்டு மேம்பட்ட மனிதர்களே சமத்துவத்தின் உண்மையான உபதேசிகள்.

» **எ**ல்லாம் தொலையட்டும்; ஊக்கம் மட்டும் இருந்தால் அனைத்தையும் பெறலாம்.

» கடமையைச் செய்து மௌனமாய் இருப்பதே அவதூறுக்குச் சரியான பதில்.

» ஒழுக்கம் ஒரு போர்க்களம் போன்றது; அதில் வாழ வேண்டுமானால் ஓயாமல் போராட வேண்டும்.

» ஆஸ்தியில் நம்பிக்கை வைப்பதை விட ஆற்றலில் நம்பிக்கை வை.

» உழைப்பின்றி உயர்வதாகப் பெருமைப்படாதே; உண்மையான பெருமை உழைப்பில்தான் உள்ளது.

» மிகுந்த ஞானம் பெரும்பாலும் மிகக் குறைந்த சொற்களுடன் இணைந்து செல்லும்.

» உயர்ந்த சிந்தனைகளோடு உறவாடுவோர் ஒருபோதும் தனியாய் இருப்பதில்லை.

» மனிதன் சிரிக்கக்கூடிய நிலையில் இருக்கும் வரை அவன் ஏழையாகமாட்டான்.

» கோபத்துடன் ஒரு காரியத்தில் ஈடுபடுவதும் புயலில் கப்பல் விடுவதும் ஒன்றுதான்.

» உள்ளத்தூய்மையும் உயர்ந்த நோக்கமும் வள்ளல் தன்மையும் வாய்ந்தவரே தலைவர்.

» பகைவனை அடக்குபவனைவிட ஆசைகளை அடக்குபவனே மாவீரன்.

» தன்னடக்கம் பேணாமல் அகிம்சையைப் போற்ற முடியாது.

» ஒருவரிடம் அச்சம் கொண்டால் அவரிடம் அன்பு கொள்ள முடியாது.

» பிறரை சீர்திருத்துவதைவிட தன்னைச் சீர்திருத்துவதே முதல் கடமையாகும்.

**ர.நந்தினி**

**இரண்டாமாண்டு கணிதம் ‘இ’ பிரிவு**

## பொது அறிவு

1. தாதா சாகிப் பால்கே விருது பெற்ற முதல் தமிழ் நடிகர் யார்?

**விடை :** சிவாஜி கணேசன்

2. மனித உடலில் எத்தனை தசைகள் உள்ளன?

**விடை :** 639

3. வந்தே மாதரம் என்ற தேசியப்பாடலை எழுதியவர் யார்?

**விடை :** பக்கிம் சந்திர சட்டர்ஜி

4. விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் யார்?

**விடை :** ராகேஷ் சர்மா

5. ஆக்ஸிஜனைக் கண்டுபிடித்தவர் யார்?

**விடை :** லவோச்சியர்

6. ஆஸ்கார் விருது பெற்ற முதல் தமிழர் யார்?

**விடை :** ஏ.ஆர்.ரகுமான்

7. மூன்றுமுறை தேசிய விருது பெற்ற தமிழ் நடிகர் யார்?

**விடை :** கமலஹாசன்

8. எந்த மாவட்டத்தில் உப்பு அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது?

**விடை :** தூத்துக்குடி

9. தமிழ்நாட்டின் முதல் முதல்வர் யார்?

**விடை :** அ.சுப்புராயலு ரெட்டியார்(1920-21)

10. தமிழ்நாட்டின் முதல் திரைப்படம் எது?

**விடை :** கீசகவதம்

**அ.சந்தியா**

**இரண்டாமாண்டு கணிதம் 'இ' பிரிவு**

## நான் நானாக...

நான் நியூட்டனாக
நினைத்தேன்
இயற்பியல் வரவில்லை...
நான் இராமானுஜனாக
நினைத்தேன்
கணிதம் வரவில்லை...
நான் திருவள்ளுவர் ஆக
நினைத்தேன்
செய்யுள் இயற்றத்
தெரியவில்லை....
நான் கம்பனாக
நினைத்தேன்
கவிதை இயற்றத்
தெரியவில்லை...
இறுதியில் - நான்
நானாக இருந்தேன்
வெற்றிபெற்றேன்...

**அ.சந்தியா**
**இரண்டாமாண்டு கணிதம் 'இ' பிரிவு**

## நட்பு

உயிரோடு இருக்க
ஒரு பிறவி போதும் -ஆனால்
உன் நட்போடு இருக்க பல

பிறவி வேண்டும்.
காலம் கடந்தாலும்
உணர்வுகள் உனக்காக...
கண்கள் உறங்கினாலும்
கனவுகள் உனக்காக...
நீ என்னை மறந்தாலும்
என் நினைவுகள் உனக்காக...
நான் இருந்தாலும் இறந்தாலும் - என்றும்
உன் நட்பு
என் நெஞ்சோடு....

## அம்மா

நான் பார்த்த
முதல் முகம்
அன்பெனும் அம்மா!
நான் வாழ்ந்த
முதலிடம்
அம்மாவின் கருவறையில்..
நான் பேசிய
முதல் வார்த்தை
அம்மா! அம்மா! அம்மா...!
யாரையும் புரிந்துகொண்டபின் நேசி
நேசித்தபின் யாரையும் வெறுக்காதே
இல்லையெனில்
வலி உனக்கு மட்டும் இல்லை
நீ நேசித்த இதயத்திற்கும்தான்..
ஒரே சொல்லில்

ஒரே உலகம் அம்மா.

அன்போ அரவணைப்போ

தாய்க்கு நிகரானவள்

இவ்வுலகில் எவருமில்லை.....

பாதையும் தெரியும்

சேருமிடமும் தெரியும்

போகத்தான் மனமில்லை

உன்னை விட்டு....

என்னை ஈன்றெடுக்காவிட்டாலும்

தாயாகிறாள் எனக்கு

என் தங்கை எனும்

அழகு தேவதை........

**கோ.சௌபாக்யா**

**முதலாமாண்டு கணிதம் 'ஆ' பிரிவு**

## அம்மா

வார்த்தைகளே

இல்லாத வடிவம்

அளவுகோலே

இல்லாத அன்பு

சுயநலம் இல்லாத

இதயம்

வெறுப்பைக் காட்டாத

முகம்தான்

அம்மா....

## அன்பின் சிறப்பு

**உ**ன்னோடு நான் இருந்த

ஒவ்வொரு மணித்துளியும்

என் மரணப்படுக்கையிலும்
மறக்காது அன்பே!
அலைகடலும் உன்
அன்பும் ஒன்றுதான்
இரண்டும் ஓய்வதே இல்லை...

## அன்பு

**உ**றவுகள் சொல்ல
பலர் இருந்தாலும்
என் உணர்வைப்
புரிந்துகொள்ள
நீ மட்டுமே இன்று
இருக்கிறாய்....

**ச.செல்வரங்கன்**
**இரண்டாமாண்டு இயற்பியல் 'ஆ' பிரிவு**

## இயற்கை

சாரல் மழையில் நனைந்த காற்று
தென்றல் சில்லிடுகிறது.
மழைநீர் கொட்டும் சத்தம்
புதியதொரு இசையமைக்கிறது.
மலர்களெல்லாம் நீரில் நனைந்து
தலையாட்டிப் புன்னகைக்கிறது.
எல்லார் மனதும்
மழையில் நனையவே
மன்றாடிக் கெஞ்சுகிறது.
பல மைல்தூரம் கடந்துவரும்

இந்த நீர்த்துளிகள்
தேவனின் தீர்த்தமாகவும்
இருக்கலாம்....

## அறிந்துகொள் தோழா!

கஷ்டப்படுபவனுக்கு
சிரிப்பு தெரியாது..
சிரிக்கிறவனுக்கு
கஷ்டம் தெரியாது..
கஷ்டத்திலும் சிரிக்கிறவனுக்கு
தோல்வியே கிடையாது...

**எஸ்.தில்லையரசு**
**இரண்டாமாண்டு இயற்பியல் 'ஆ' பிரிவு**

## நாட்டுப்பற்று

கொஞ்சம் படித்தால்
சொந்த கிராமத்தைவிட்டு
வெளியேறுகிறோம்...
நிறையப் படித்தால்
சொந்த நாட்டைவிட்டே
வெளியேறுகிறோம்...

## வாழ்க்கைத் தத்துவம்

**நே**ற்று என்பது பழைய பேப்பர்
இன்று என்பது நியூஸ் பேப்பர்
நாளை என்பது கொஸ்டின் பேப்பர்

வாழ்க்கை என்பது ஆன்ஸ்சர்பேப்பர்
கவனமாக எழுதுங்கள்...

## உதவி

**பெ**ற்ற உதவிக்கு நன்றி
மறக்காதே!
செய்த உதவிக்கு
நன்றி எதிர்பார்க்காதே!!!

## நல்ல பார்வை

உனக்கு நீ நல்லவனாய்
இருந்தால் போதும்
மற்றவருக்கு நீ
கெட்டவனாய்த் தெரிந்தால்
அது உன் குற்றமில்லை
கண்ணில் பிழைஎன்றால்
பிம்பமும் பிழையே!!
அது பார்க்கப்படுபவன்
பிழையல்ல...
பார்ப்பவன் பிழை...!

## ஆசை

எப்போது நீ ஆசைகள்
இல்லாத வாழ்க்கை வாழத்
தொடங்குகிறாயோ

அப்போதுதான் வாழ்க்கை
உனக்குத் துன்பங்கள்
இல்லாத வாழ்க்கையாக அமையும்...

## வாழ்வின் பாதை

கருவறையில் இருந்து இறங்கி
கல்லறையை வரை
நடந்து செல்லும் தூரம்தான்
வாழ்க்கை....
வருந்தாதே
எதை இழந்தாலும் - அது
இன்னொரு வடிவில்
வந்துசேரும்.

## வெற்றியின் ரகசியம்


வாழ்வில் நீ வெற்றிபெறும்
போதெல்லாம்
உன் முதல் தோல்வி
நினைவுக்கு வந்தால்
உன்னைவெல்ல யாராலும்
முடியாது...


**தே.திருமலை**
**இரண்டாமாண்டு இயற்பியல் 'அ' பிரிவு**


I BCA-D


S. Gunasekar
I-BCA-D


by.
I-Bsc-Maths-C


22/4/17


P.K. Rajan Gokul
I BCA-D KSRCAS

